யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி

# பரிசளிப்பு நாள்-பேருரை

# இளந்தலைமுறையினரும் கல்வியும்

பேராசிரியர் க. அருணாசலம், **B.A. Hons., M.A, Ph.D.**

தலைவர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

1998

# இளந்தலைமுறையினரும் கல்வியும்

## I

## மரபுக்கல்வியும் நவீன கல்வியும்

மனிதகுல வரலாற்றிலும் வளர்ச்சியிலும் காலத்துக்குக் காலம் பலதுறைகள் சார்ந்த கல்வி விருத்தியானது ஏற்படுத்தி வந்த விளைவுகள் அனந்தம். கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே உலகின் பல்வேறு நாடுகளிலும் சமயம் தொடக்கம் அறிவியல் வரையிலான பலதுறைகள் சார்ந்த கல்வி வளர்ச்சியடைந்து வந்துள்ளதையும் கல்வியின் பெருமையையும் சிறப்புகளையும் நற்பயன்களையும் நம்முன்னோர் வற்புறுத்தி வந்துள்ளதையும் அவதானிக்கலாம்

காலத்தால் முற்பட்ட தமிழ் இலக்கியங்களான சங்கச் செய்யுட்களிலும் கல்வியின் சிறப்பும் பெருமையும் நற்பயன்களும் வலியுறுத்தப்பட்டுள்ளமை மனங்கொளத்தக்கது. எடுத்துக் காட்டாக,

உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

(புறநானூறு - 183)

என வரும் புறநானூற்றுப் பாடல் இவ்வகையில் நோக்கத் தக்கது.

சங்க காலத்தில் பலதுறைகளிலும் அறிவு மிக்க கல்விமான்கள் வாழ்ந்தமை, வானநூற் பயிற்சி மிக்கவர்களாகப் பலர் விளங்கியமை, சூரிய, சந்திர இயக்கங்கள், அவை செல்லும் வானவழி, காற்றின் இயக்கம், பரந்து விளங்கும் ஆகாயம், நட்சத்திரங்கள், அவற்றின் செயற்பாடுகள், மருத்துவம், பொறியியல், புவியியல் முதலிய துறைகள் பற்றிய அவர்களது பரந்த அறிவு முதலியனபற்றியெல்லாம் சங்கச் செய்யுட்கள் அரிய பல செய்திகளை விளம்பி நிற்கின்றன. இவை பற்றிப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் முதல் பேராசிரியர்கள் வண. பிதா. தனிநாயக அடிகள், வித்தியானந்தன், கைலாசபதி, கமில் சுவலபில் முதலியோர் வரை பலரும் விரிவான முறையில் ஆராய்ந்து அரிய பலநூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர்.

சங்ககாலத்தைத் தொடர்ந்து வந்த சங்கமருவிய காலத்திலும் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் பின்னரும் தமிழ் மக்களது பலதுறைகள் சார்ந்த கல்வி அறிவு மேன்மேலும் வளர்ச்சியடைந்து வந்துள்ளதனை இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், மெய்க்கீர்த்திகள், புதைபொருட் சின்னங்கள், இன்றுவரை நிலைத்து நிற்கும் நிலைபேறான கட்டிடங்கள் முதலியவற்றின் வாயிலாக நாம் அறிய முடிகின்றது. இவை யாவற்றுள்ளும் உலகமே போற்றும் தெய்வப் புலவனான வள்ளுவன் முதல் ஔவையார், கல்வியிற் பெரியனான கம்பன் முதலியோர் வரை ஆழ்ந்தகன்ற அறிவுசால் பெருமக்கள் படைத்தளித்த அரும்பொக்கிஷங்கள் இன்று அனைத்துலகினதும் கவனத்தை ஈர்த்து நிற்கின்றன.

யுகப் பெருங்கவிஞன், புது நெறிகாட்டிய புலவன், நவயுகக் கவிஞன், கிருதயுகத்தைக் கேடின்றி நிறுத்த விரதம்

பூண்டு அயராதுழைத்த கவிஞன், உலகின் மாபெருங் கவிஞர்களுள் ஒருவன் என்றெல்லாம் உலகமே போற்றிப் புகழும் கவிஞனான பாரதி கல்வியின் முக்கியத்துவத்தையும் மகோன்னதத்தையும் பெரும் பயன்களையும் உள்ளவாறு உணர்ந்த நிலையில்,

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.

(பாரதியார் கவிதைகள் : தோத்திரப் பாடல்கள்; 61;9)

எனப் பாடியுள்ளமை மனங்கொளத்தக்கது.

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் எனவும் பிச்சைபுகினும் கற்கை நன்றே எனவும் இளமையிற் கல் எனவும் கற்றவர்க்கு எல்லா நாடும் எல்லா ஊரும் தம்மதே எனவும் கேடில் விழுச்செல்வம் கல்வியே எனவும் கல்லாதார் விலங்குகளுக்கு ஒப்பாவார் எனவும் அறிவுடையார் எல்லாம் உடையர் எனவும் கல்வியின் பெருமையை உணர்ந்து ஒருவர் சாகும்வரைக்கும் கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் எனவும் வள்ளுவரும் பிறரும் வற்புறுத்தியுள்ளனர். திருக்குறளைப் போன்றே தமிழில் எழுந்துள்ள அறநூல்களும் பிறவும் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. கிறிஸ்தாப்த காலத்திலிருந்து பலநூற்றாண்டுகளாகத் தமிழகத்திற் கல்வியைப் போதிப்பதிலும் பரப்புவதிலும் சிறந்த இலக்கிய, இலக்கண நூல்களை இயற்றுவதிலும் ஏனையோரிலும் பார்க்கச் சமணத்துறவிகள் முன்னின்றுழைத்தமையை அவதானிக்க முடிகின்றது.

தமிழ் மக்களது வரலாற்றில் நீண்டகாலமாக நிலவி வந்த குருகுலக் கல்வி முறை இந்தியாவிலும் இலங்கையிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து பிரித்தானியர் ஆட்சி நிலைபெற்றதைத் தொடர்ந்து மெல்ல மெல்ல அருகலாயிற்று. அதே சமயம் நவீனகல்வி முறை வேகமாக வளரலாயிற்று. நவீன கல்வி முறையின் முக்கியமான சில இயல்புகள் இங்கு அவதானிக்கத் தக்கவை. மரபுக் கல்வி முறையில் சமயத்துறை சார்ந்த கல்விக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அக் கல்வி முறை இடைக்காலத்தில் பெரும்பாலும் மடங்களிலும் ஆதீனங்களிலும் சிறைப்பிடிக்கப் பட்டிருந்தது. ஆயின் நவீன கல்வி முறை சமயத்துறையுடன் மட்டும் நில்லாது அரசியல், புவியியல், பொருளியல், சமூகவியல், மொழியியல், வரலாற்றியல், அறிவியல் எனப் பல துறைகளையும் உள்ளடக்கியதாகவும் அகண்டாகாரமுடையதாகவும் விளங்குகின்றது. அதே சமயம் காலம் காலமாகச் சமூகத்தின் ஒரு சிறு பகுதியினரது சொத்துடைமையாகவிருந்த கல்விச் செல்வம் பொதுவுடைமையாக்கப்படலாயிற்று. சூத்திரனுக்கு எழுத் தறிவித்தவன் ஏழா நரகத்துக் கீழா நரகம் புகுவான்'' என அச்சுறுத்தப்பட்டு உடலுழைப்பாளிகளுக்குக் காலம் காலமாகக் கல்வி மறுக்கப்பட்டு வந்துள்ளமை சிந்திக்கத்தக்கது. ஆயின் பிரித்தானியரினால் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன கல்வியானது பொது மக்கள் மத்தியிலும் சிறிது சிறிதாகப் பரவலாயிற்று. காலப்போக்கில் அறிமுகமான இலவசக் கல்வி முறை முதலியன பொது மக்கள் மத்தியிலான கல்விப் பரம்பலை மேன்மேலும் முன்னெடுத்துச் செல்லலாயின.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையும் அவர்களது மொழி, பண்பாட்டுத் திணிப்பையும் சுரண்டற் கொடுமையையும் நஞ்செனவெறுத்துச் சன்னத்த வெறிகொண்டு தாக்கிய பாரதியார் அவர்களது ஆட்சியினால் ஏற்பட்ட

பெருநன்மைகளைப் புகழவும் தயங்கவில்லை. அவற்றுள் ஒன்று நவீன கல்வி அறிமுகமானமையே.

"---மேற்றிசை இருளினை வெருட்டிய ஞான
ஒண்பெருங் கதிரின் ஓரிரு கிரணம் என்
பாலரின் மீது படுதலுற் றனவே.

(மகாகவி பாரதியார் கவிதைகள்; சான்றோர்; வேல்ஸ இளவரசருக்கு நல்வரவு)

என மேலைத்தேய நாடுகளின் இருளினை அகற்றிய 'ஞான ஒண்பெருங் கதிராக' அறிவியலின் பெருமையை வருணித்துள்ளார். 1921ஆம் ஆண்டு பாரதியார் அமரத்துவம் அடைந்தார். அவர் மறைந்த பின் கடந்த எழுபத்தேழு ஆண்டுகளுள் அறிவியல் துறையில் ஏற்பட்டு வரும் வியத்தகு முன்னேற்றங்களும் புதிய கண்டு பிடிப்புகளும் பிரமிக்கத்தக்கவை.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமான முறையிலேயே நவீன கல்வியையும் வளர்க்க முனைந்தது. இதற்கு எதிராகத் தாய் மொழி மூலமான தேசியக் கல்வியின் அவசியத்தை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பாரதியார் மிகத் தீவிரமாக வலியுறுத்தினார்; வியக்கத்தக்க வகையில் அதற்கான வழிமுறைகளையும் விரிவாக விளக்கினார். காலம் கடந்த பின் பலராலும் இன்று அதன் முக்கியத்துவம் உணரப்பட்டு அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருதல் அவதானித்தற்குரியது.

# II

## இளந்தலைமுறையினர்

எமது முன்னோர்–கல்வியறிவு மிக்கவர்கள், உள்ஒளி (insight) வாய்க்கப்பெற்றவர்கள், சமயப் பெரியோர்கள் முதலியோர்–தாம் பெற்றுக் கொண்ட முதிர்ந்த அனுபவங்களால் மனிதன் இவ்வுலகில் மனிதனாகவும் வாழ்வாங்கு வாழும் பொருட்டும் பல நெறிமுறைகளை வகுத்தனர். மனித வாழ்வை, பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு படிகளாக வகுத்தனர். இதேபோன்று தொழில் திறமை அடிப்படையில் (பிற்காலத்திலேயே பிறப்பின் அடிப்படையில் கருதப்படலாயிற்று) நான்கு வருணங்களை வகுத்தனர். மனிதன் தனது மனதைப் பக்குவப் படுத்திக் கொண்டு இறைவனிடம் சரணடைந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளில் நின்றொழுக வேண்டும் என வழிவகுத்துக் காட்டினர். மனிதன் அடையக் கூடிய வீடுபேற்றினையும் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்காக வகுத்திருந்தனர். இது போன்றே ஏறத்தாழ நூறு ஆண்டுகளைக் கொண்ட ஒரு மனிதனது வாழ்க்கைப் பருவங்களையும் முதலாம் தலைமுறை (1–25 வயது வரை), இரண்டாந்தலைமுறை (26–50 வயது வரை), மூன்றாந் தலைமுறை (51–75 வயது வரை), நான்காம் தலைமுறை (75 வயதிற்கு மேல்) என நான்காக வகுத்துள்ளனர்.

தலைமுறை (Generation) என்பதற்குப் பலரும் பலவகையான விளக்கங்களைக் கொடுத்திருந்தாலும் "ஒருவர் பிறந்து வளர்ந்து மற்றுமொரு சந்ததியை உருவாக்கிவிடும் வரை உள்ள (இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டு) காலப் பகுதி." (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, தமிழ்–தமிழ், ஆங்கிலம், 1992) என்னும் விளக்கம் பொதுவாக ஏற்றுக்

கொள்ளக்கூடிய ஒன்றாகும். மிக அண்மைக் காலம் வரை எமது சமூகத்தில் பெரும்பாலானவர்கள் இருபது அல்லது இருபத்தைந்து வயதிற்குள்ளேயே திருமணம் முடித்துப் புதிய சந்ததியை உருவாக்கி வந்தனர் என்பதும் இன்று பல்வேறு காரணங்களினால் திருமணத்திற்கான வயதெல்லை கூடிச் செல்கிறது என்பதும் மனங்கொளத்தக்கவை. இன்று இளந்தலைமுறையென்பது ஒருவர் பிறந்து வளர்ந்து கல்வி பயின்று பல்கலைக்கழகக் கல்வியின் முதற் பட்டத்தை (First Degree)ப் பெற்றுக் கொள்ளும் காலப்பகுதியைக் கொண்டதெனலாம். இள வயதினர், நடுத்தர வயதினர், முதியவர், வயோதிபர் என்னும் சொல்லாட்சிகளும் இங்கு அவதானிக்கத் தக்கவை.

மனித வாழ்வின் நான்கு தலைமுறைகளுள் முதலாம் தலைமுறையாக விளங்கும் இளைய தலைமுறையினர் சமுதாயத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றனர்; சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றனர். பெற்றோர் தமது பிள்ளைகள் நற்குண நற்செய்கைகள் உடையவர்களாகவும் கல்வியில் வல்லவர்களாகவும் பலரும் புகழும் வண்ணம் தமக்கும் தாம் பிறந்த குடும்பத்திற்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயன்படுபவர்களாகவும் வாழ வேண்டும் எனப் பேராவல் கொள்கின்றனர்; அதன் பொருட்டுத் தம்மாலானவரை முயல்கின்றனர்; வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, ஆலாய்ப் பறந்து அளப்பரிய தியாகங்களைப் புரிகின்றனர்; தம்பிள்ளைகளே தமது இன்னுயிர் எனக் கருதிச் செயற்படுகின்றனர். இவை யாவும் ஒரு சமூகத்தில் இளந்தலைமுறையினரின் மிகுந்த முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவனவன்றோ!

'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பதும் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா' என்பதும் ஆன்றோர் வாக்கு. சிறு வயதிலிருந்தே குழந்தைகளை

நன்னெறிப்படுத்துவதிலும் கல்வியில் ஆர்வம் கொள்ளச் செய்வதிலும் மனிதநேயம் கொண்டவர்களாகவும் மனித விழுமியங்களைப் பேணி நடப்பவர்களாகவும் வாழச் செய்வதிலும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றி ஆட்சியாளர்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதை நாம் மனங்கொளல் வேண்டும். சிறுவயதிலிருந்தே குழந்தைகளை நெறிப்படுத்தத் தவறினால் அதனால் ஏற்படும் தீங்குகள் அனந்தம். இன்றைய உலக வரலாறு இவற்றைத் திரும்பத் திரும்ப நிரூபித்து நிற்கிறது.

குழந்தைகளே வளர்ந்து இளந்தலை முறையின ராகின்றனர்; குடும்பத் தலைவனாகவும் தலைவியாகவும் விளங்கிச் சமூகத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்; சமூகத்தினதும் நாட்டினதும் பல்வேறு துறைகளினதும் நிறுவனங்களினதும் தலைவர்களாக விளங்கவிருப்பவர்கள். ஒரு சமூகத்தின் உயிர்நாடியாக விளங்கும் இளந்தலைமுறையினரை எந்த ஒரு சமூகம் மனம் போனபடியெல்லாம் நடக்க விடுகின்றதோ நன்னெறியில் வழிப்படுத்தத் தவறுகிறதோ அச்சமூகம் சீரழியும் என்பதில் ஐயமில்லை.

இளந்தலைமுறையினர் தாம் எண்ணியவற்றை நிறை வேற்றுவதில் தீவிர முனைப்புக் காட்டுவர்; விரும்பியவற்றை அடைவதில் தீவிர உத்வேகம் கொள்வர்; இளமைத்துடிப்பும் செயல் ஊக்கமும் உடல்வலிமையும் உடையவர்; மனோ வேகம் கொண்டவர்கள்; எதிர்கால வாழ்வுபற்றி அதிக எதிர்பார்ப்பு களையும் கனவுகளையும் இலட்சியங்களையும் கொண்டவர்கள்; வாழத்துடிப்பவர்கள்; தேடலில் ஆர்வம் காட்டுபவர்கள்; இத்தகைய இளந்தலைமுறையினரைச் சிறு வயதிலிருந்தே நல்வழியிற் செலுத்துதல் வேண்டும்; அவர்களது உள்ளத்தைப் பண்படுத்தவும் சமய, சமூக விழுமியங்களைப் போற்றிப் பேணவும் வாழ்வையும் உலகினையும் செவ்வனே புரிந்து

கொள்ளவும் வாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்களையும் வெற்றி தோல்விகளையும் சோதனைகளையும் வேதனைகளையும் சவால்களையும் மனோதிடத்துடன் எதிர்கொள்ளவும் புறங்காண வேண்டியவற்றைப் புறங்காணவும் தக்கவாறு பயிற்றுவிக்க ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் வழிகாட்டல் இன்றியமையாத தாகும்.

வெறுமனே விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியும் அவைபற்றிய அறிவும் செல்வச் செழிப்பும் மனிதனை 'மனிதத்துவம்'' நிறைந்த முழுமனிதனாக்கமாட்டா. விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகள் மெத்தவும் வளர்ந்துள்ள மேற்கத்தைய நாடுகளிலேயே மன அமைதியின்மை அதிகம் காணப்படுவதாகவும் மனிதத்துவம் அருகிவருவதாகவும் மனித நாகரிகம் சிதைக்கப்படுவதாகவும் கருதப்படுகின்றது. பண்டைய கல்வி முறைகளிற் சில குறைபாடுகள் காணப்பட்டபோதும் போற்றத் தகுந்த பல பண்புகளும் அவற்றிற் காணப் படுகின்றமை மனங்கொளத்தக்கது. எம்முன்னோரால் வகுக்கப் பட்ட வாழ்க்கைப்படிகளுள் முதற்படி பிரமச்சரியம் என்பதாகும்.

இளமைப் பருவம் தீவிர வேகம் பொருந்தியது; வாழ்க்கை பற்றிய செய்திகளை அறிய முயல்வதிலும் தேடலிலும் நல்லதன் நலனையும் தீயதன் தீமையையும் உள்ளவாறு பகுத்துணர முயலாது உலக இன்பங்களைத் துய்ப்பதிலும் மிகுந்த ஈடுபாடு காட்டும், தன்மையது. இந்நிலையில் வலிமையும் வேகமும் மிக்க மனதைக் கட்டுப்படுத்தி நல்வழியிற் செலுத்துவது மிக மிக இன்றியமை யாதது. மனதைக் கட்டுப்படுத்தாது அதன் விருப்பப்படி தறிகெட்டு ஓட விட்டால் அவற்றால் விளையும் தீமைகள் சொல்லுந்தரமன்று.

சிறுவயதிலிருந்தே தீயவற்றைத் தவிர்ப்பதுடனமையாது நல்லனவற்றைச் செய்வதில் ஆர்வம் கொள்ளுதலும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துதலும் இன்றியமையாதன. புலனடக்கத்தின் இன்றியமையாமை பற்றிச் சங்கச்சான்றோர்கள், வள்ளுவர், அறநூல்களின் ஆசிரியர்கள் முதல் சமயப் பெரியார்கள் வரை, மகாத்மா காந்தி முதல் பிரம்மகுமாரிகள் வரை பலரும் வற்புறுத்தியுள்ளமை மனங்கொளத்தக்கவை.

விரதங்கள் யாவற்றுள்ளும் மிகப்பெரிய விரதமாகக் கருதப்படுவது பிரமச்சரிய விரதமேயாகும். புலனடக்கம் நிறைந்த ஒருவர் பிரமச்சரிய விரதத்தினைச் செவ்வனே கடைப்பிடித்து ஒழுகுமிடத்து ஞாபகசக்தியும் அறிவாற்றலும் மனோவலிமையும் ஜீவசக்தியும் சாந்தமும் ஒருங்கே அதிகரிக்கின்றன என்பர். புலனடக்கமும் தியானமும் ஒன்றுடன், ஒன்று பின்னிப் பிணைந்தவை. புலனடக்கத்தால் மனோதைரியமும் தற் பாதுகாப்பும் தியானத்தால் மனத்தெளிவும் ஏற்படுகின்றன. பிரமச்சரியத்தின் அடிப்படையும் இதுவேயாகும். விரதம் என்பதற்குப் பல கருத்துகள் கூறப்படினும் எடுத்துக்கொண்ட குறிக்கோளை விரைந்து நிறைவேற்றுவதற்காக ஒருவர் தமது புலன்களைக் கட்டுப்படுத்திச் சக்தி அனைத்தையும் ஒருமுகப்படுத்திச் செயலாற்றுவதில் மன உறுதியோடு நிற்றல் என்பதே கூடுதலாகப் பொருந்தக்கூடியது எனலாம். “எடுத்தகாரியத்தைத் தொடுத்து முடிப்பதற்கு விரதம் பூண்டுள்ளான்” என்னும் தொடர் வழக்கிலுள்ளமையும் மனங்கொளத்தக்கது.

பண்டைய கல்விமுறையில் தியானத்திற்கு முக்கிய இடமளிக்கப்பட்டது. கல்வியை விரைந்து கற்பதற்கும் கிரகிக்கும் ஆற்றலை விருத்தி செய்வதற்கும் அறிவுத் தெளிவினை ஏற்படுத்துவதற்கும் ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்வதற்கும் மனோதிடத்தை வளர்ப்பதற்கும் மேன்மை யுறுவதற்கும் தியானம் இன்றியமையாததாகக் கருதப்பட்டது.

நவீன உலகில் சுவாமி விவேகானந்தரும் சுவாமி விபுலாநந்தரும் பிறரும் தியானத்தின் அவசியத்தையும் மேன்மையையும் வற்புறுத்தியதோடமையாது தமது வாழ் நாள் முழுவதும் அதனைக் கடைப்பிடித்து ஒழுகியமையும் மேன்மையுற்றமையும் மனங்கொளத்தக்கவை. மகாத்மா காந்தியின் வாழ்வும் வரலாறும் இதற்குத் தகுந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

செல்வத்தைப் பெருக்குவதும் உலக இன்பங்களையெல்லாம் வேண்டியமட்டும் துய்ப்பதும் பிறரது உழைப்பினை ஈவு இரக்கமின்றிச் சுரண்டுவதுமே வாழ்க்கையின் உன்னதக் குறிக்கோள் எனக் கருதிச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய மனிதர் அமைதியிழந்து தவிக்கின்றனர்; இன்பமும் வேண்டாம்; அவற்றால் ஏற்படும் துன்பமும் வேண்டாம்; அமைதியே வேண்டும் என்னும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்; எங்கே நிம்மதி! எங்கே நிம்மதி! எங்கே நிம்மதி! என நிம்மதியைத் தேடி ஆலாய்ப் பறக்கின்றனர். இத்தகையதொரு பரிதாப நிலையில், நிம்மதியைப் பெறுவதற்கான ஒரே வழி தியானம் (யோகாசனம்) என்ற நிலையை ஓரளவாவது உணரத் தொடங்கியுள்ளனர்; இவற்றின் விளைவு! கிழடுதட்டியவர்களுக்கும் சாமியார்களுக்கும் வாழ்வில் விரக்தியுற்றவர்களுக்கும் மட்டுமே தியானம் எனத் தப்புக் கணக்குப் போட்ட நவீன மனிதர் தியானத்தின் மேன்மையை மெல்ல மெல்ல உணரத் தொடங்கியுள்ளனர்; இதன் காரணமாகவே இன்று ஆண்கள்–பெண்கள், செல்வர்–வறியோர், மேற்கத்தைய நாடுகள்–மத்திய கிழக்கு நாடுகள்–கீழைத்தேய நாடுகள், அதிமேதாவிகள்–ஆண்டி பரதேசிகள் என்னும் அற்பத்தனமான வேறுபாடுகளையெல்லாம் மறந்து பூமிப்பந்தின் மத்திய கோட்டிலிருந்து வடதுருவம் வரை, அங்கிருந்து தென்துருவம் வரை–சாதி, மத, இன, மொழி, பிரதேசம் முதலிய குறுகிய எல்லைகளைக் கடந்து–பெரிய நகரங்கள்,

சிறிய நகரங்கள், கிராமங்கள், வளர்ச்சியுற்ற நாடுகள், வளர்ச்சியுற்றுக் கொண்டிருக்கும் நாடுகள், வளர்ச்சியடையாத பின்தங்கிய நாடுகள், இனங்கள், சமூகங்கள் என்னும் பேதங்களையும் கடந்து உலகெங்கணும் தியானம் (யோகாசனம்) (யோகம்) என்பது மனித வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. அவற்றை மேற்கொள்வதற்கான பிரயத்தனங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

புலனடக்கத்தின் அவசியத்தை வள்ளுவர் பலவாறு வலியுறுத்தியுள்ளார்.

"உரனென்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து."

எனவும்,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து,

எனவும்,

சென்ற இடத்தால் செலவிடா, தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு

எனவும் வரும் குறட்பாக்கள் இவ்வகையில் நோக்கத்தக்கவை.

மனித வாழ்வில் மாணவப் பருவகாலம் விலைமதிப்பற்ற காலம் எனலாம். 'இளமையிற் கல்', 'எந்நேர ஓய்விலும் முன்னேற முயலுக' என்னும் ஆன்றோர் வாக்குகளை 'ஒவ்வொரு மாணவரும்' மனத்திருத்துதல் வேண்டும். வளம் மிக்க எதிர்கால வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்ற பலம் வாய்ந்த அத்திவாரத்தினை இட்டுக் கொள்ள வேண்டிய காலம் மாணவப் பருவ காலமேயாகும். 'நேரம் பொன்னானது' என்பர். மாணவர்கள் சிறுபொழுது நேரத்தைக் கூட அவப்பொழுதாக்கக் கூடாது. தியாக சிந்தையும் எளிமையும் சிக்கனமும் கடின

உழைப்பும் மனோதிடமும் தன்னம்பிக்கையும் செயலூக்கமும் உடையவர்களாகச் செயற்படும் மாணவர்களைத் தேடி முன்னேற்றம் தானாகவே வரும்; நினைப்பதெல்லாம் வெற்றியாகும்; தோல்விகளும் இறுதியில் வெற்றிகளாகும். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" எனவும் "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவிலா ஊக்கம் உடையான் உழை" எனவும் "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" எனவும் வரும் ஆன்றோர் வாக்குகளை நாம் மனம் கொள வேண்டும்.

# III

# இளந்தலை முறையினரும் முதிய தலைமுறையினரும்

முதலாம் தலைமுறையினரை இளந்தலை முறையினர் எனக் கொண்டால் மூன்றாம் நான்காம் தலைமுறையினரை முதிய தலைமுறையினர் எனக் கொள்ளலாம். இளந்தலை முறையினரும் முதிய தலைமுறையினரும் ஒருவர் மீது ஒருவர் தங்கியுள்ளனர் என்பதும் கால ஓட்டத்தினூடே தலைமுறை முரண்பாடுகள் காலத்துக்குக் காலம் கூடவோ குறையவோ இடம்பெறுகின்றன என்பதும் நேற்றைய இளைஞர் இன்றைய முதியோர் என்பதும் இன்றைய இளைஞர் நாளைய முதியோர் என்பதும் இன்றைய குழந்தைகள் நாளைய இளைஞர் என்பதும் நாம் மனங்கொள வேண்டியவை. 'தலைமுறை முரண்பாடு' பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் இன்று பலரும் பலவாறான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

தலைமுறைகளுக்கிடையே முரண்பாடுகள் எக்காலத்திலுமே நிலவி வந்திருப்பினும் இன்று தலைமுறைகளுக்கிடையிலான இடைவெளியும் முரண்பாடுகளும் மிகவும் அதிகரித்துள்ளன என்பது பலரதும் கருத்தாகும். மாறுதல் உலகத்தியற்கை. கணந்தோறும் இவ்வுலகில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. ஆயின், பல்வேறு காரணங்களினால் சிலகாலப் பகுதிகளில் மாற்றங்கள் மந்த கதியிலும் சிலகாலப் பகுதிகளில் வேகமாகவும் சிலகாலப் பகுதிகளில் மிகவேகமாகவும் நிகழ்கின்றன. பொதுவாக இருபதாம் நூற்றாண்டிலும் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் மாற்றங்கள் மிக வேகமாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

தலைமுறைகளுக்கிடையிலான முரண்பாடுகளும் இடைவெளியும் முன்னர் என்றுமே இல்லாத அளவிற்கு மிக வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் முதிய தலைமுறையினர் இளைய தலைமுறையினரைக் குறை சொல்வதும் இளைய தலைமுறையினர் முதிய தலைமுறையினரைக் குற்றம் சாட்டுவதும் பரஸ்பரம் நடந்து கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். வயதில் முதிர்ந்தவர்கள் என்பதற்காக அவர்கள் கூறுவதெல்லாம் உண்மையானவை; ஏற்கத் தக்கவை என நாம் கொள்ளலாகாது, வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்கள் என்பதற்காக இளைய தலைமுறையினர் கூறுவதெல்லாம் ஏற்கத் தகாதவை; பொருத்தமற்றவை என உதாசீனம் செய்யலாகாது,

முதியவர்கள்தான் அறிவும் அனுபவமும் மிக்கவர்கள்; கள்ளங்கபடம் அற்றவர்கள்; நன்னடத்தையுடையவர்கள்; உலகினைப் புரிந்து கொண்டவர்கள்; உண்மைகளை ஆராய்ந்து கண்டறியத் தக்கவர்கள். இளையவர்கள் படபடப்பு

மிக்கவர்கள்; விரைவில் உணர்ச்சிவசப்படுபவர்கள்; பொறுப் புணர்ச்சியற்றவர்கள்; அறிவோ அனுபவமோ அற்றவர்கள்; நன்னடத்தையில்லாதவர்கள்; உலகினைப் புரிந்து கொள்ளும் மனோபக்குவம் அற்றவர்கள் என்னும் மனப்பாங்கு முதியவர்கள் பலரிடம் காணப்படுவதை மறுப்பதற்கில்லை. இளந்தலை முறையினர் முதிய தலைமுறையினரை நோக்கி ஏதாவது அறிவுரை கூறினால் அவற்றைப் பொறுமையோடு கேட்டு அவற்றின் குறை நிறைகளை அறிந்து கொள்வதற்குப் பதிலாக, "எமது வயதென்ன! அறிவென்ன! அனுபவமென்ன! 'முளைப்பதற்கு முன்னம் இதுகள் எங்களுக்குப் புத்தி சொல்லப்புறப்படுகுதுகள்', காலங்கெட்டுப் போச்சு. காலடியில் கிடக்க வேண்டியதுகள் தலையிலை தொத்தி இருக்கப் பாக்குதுகள். இதனாலேதானே இந்தக் காலத்திலை மழையே ஒழுங்காகப் பெய்வதில்லை." என்றெல்லாம் முதியவர்கள் இளையோர் மீது எரிந்து விழுவதோ வீம்பு பேசுவதோ அறியாமைத்தனமாகும்.

அறிவுக்கும் வயதுக்கும் தொடர்பே கிடையாது. புலனடக்கமும் புத்திக் கூர்மையும் கல்வி கேள்விகளில் மிகுதியான நாட்டமும் உள்ளத்தில் உண்மை ஒளியும் கொண்ட இளையவர்களிடம் காணும் அறிவுத் தெளிவினைக் கல்வியில் நாட்டமற்ற முதியவர்களிடம் நாம் காண முடியாது. இதனாற் போலும் நைடதம் பாடிய அதி வீரராம பாண்டியன் தமது 'வெற்றி வேற்கை' என்னும் நீதி நூலில், "தேம்படு பனையின் ------ அதனால்,

பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிறியோரெல்லாம். சிறியருமல்லர்"

எனக் கூறியுள்ளார்.

இவ்வகையிலே இந்து மதவரலாற்றிலும் தமிழ் இலக்கிய உலகிலும் உலக வரலாற்றிலும் இடம்பெற்ற பல நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு சில வருமாறு: முருகன் சிவனுக்கு உபதேசம் செய்தமை, திருஞான சம்பந்தர் மூன்று வயதிலிருந்தே தேவாரம்பாடியமை, சிறுவனாகிய மெய்கண்ட தேவர் முதியவராகிய அருணந்தி சிவாச்சாரியாருக்கு உபதேசம் செய்து அவரைத் தமது மாணவனாக்கிக் கொண்டமை, கரிகாற் சோழன் நீதிவழங்கியமை, அரசன் ஒருவன் தனது குருவையும் மந்திரிகளையும் நோக்கிக் கடவுள் பற்றிக் கேட்ட மூன்று வினாக்களுக்கு விடையளிக்க முடியாது திகைத்தமை, அப்போது மந்திரி ஒருவரின் பேத்தியான சிறுமி ஒருத்தி அரசனின் அஞ்ஞானம் அகலும் வகையில் மிக அநாயாசமாகவும் சிறந்தமுறையிலும் விடைபகர்ந்து, எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தமை, சிறுபராய மாணவர்களாயிருக்கும் போதே மகாகவிகளான இக்பால், பாரதி ஆகியோரும் வீரத்துறவியாகிய சுவாமி விவேகானந்தரும் தமது செய்கைகளாலும் கூற்றுக்களாலும் தமது ஆசிரியர்களைத் திணறடிக்கச் செய்தமை, உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாகிய கலிலியோ 'தொலை நோக்குக் கருவி'யைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு ஏழைச் சிறுவனின் செயற்பாடும் கூற்றும் உதவியமை, தமிழகத்தில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவனான திருக்குறள் திருமூல நாதனின் அபூர்வ ஆற்றலையும் புலமைத் திறனையும் கண்டு உயர் கல்வி நிறுவனங்கள் ஆறுவயதிற்குள்ளேயே பல விருதுகளையும் ஆறரைவயதில் கௌரவ டாக்டர் பட்டத்தையும் வழங்கியமை, தென்ஆபிரிக்காவிலும் டென்மார்க்கிலும் இங்கிலாந்திலும் (தமிழ்மாணவன்) சுவிற்சலாந்திலும் வாழ்ந்து கொண்டிருக்கும் நான்கு சிறுவர்களின் அபூர்வ ஆற்றலையும் புலமைத் திறனையும் கண்டு வியந்த உயர்கல்வி நிறுவனங்கள் பத்து வயதிற்குள்ளேயே அச்சிறுவர்களுக்குக் கௌரவ டாக்டர்

பட்டங்களையும் பலவிருதுகளையும் வழங்கிச் சிறப்பித் துள்ளமை முதலியவை மனங்கொளத்தக்கவை.

இளந்தலைமுறையினருக்கும் முதிய தலைமுறை யினருக்குமிடையில் எவ்வளவு தான் பாரிய முரண்பாடுகளும் இடைவெளியும் காணப்பட்டாலும் இருபகுதியினரும் ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து இயைந்து செல்வதன் மூலமே நாம் அமைதியைக் காணமுடியும். இருபகுதியினரும் ஒருவரில் ஒருவர் தங்கியுள்ளனர் என்னும் உண்மையையும் 'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்', 'பாலன் பஞ்சம் பத்து வருஷம்' என வரும் ஆன்றோர் வாக்குகளையும் நாம் மனங்கொளல் வேண்டும்.

# IV

## இளந்தலைமுறையினரும் இன்றைய சூழ்நிலையும்

மனிதனது வாழ்விலும் செயற்பாடுகளிலும் சிந்தனைகளி லும் சூழ்நிலை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் பிரச்சினைகளது ஆழத்தையோ ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தினது பிரச்சினைகளின் ஆழத்தையோ ஒரு நாடு இன்னொரு நாட்டின் பிரச்சினைகளது ஆழத்தையோ உள்ளபடி ஒருபோதும் உணர்ந்து கொண்ட தில்லை. ஒருவன் பிறந்து வாழும் குடும்பச் சூழ்நிலை, பொருளாதாரநிலை, காலச்சூழ்நிலை, பெற்றுக்கொள்ளும் கல்வி, இயல்பான சுபாவம், சொந்தவாழ்வில் அவன் அடையும் பாடுகள் முதலியவற்றுக்கேற்பவே அவனது அனுபவங்கள் அமைகின்றன. தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களி னூடாகவே அவன் தன்னையும் புற உலகினையும் நோக்குகின்றான். இதனாலேயே பலர், 'நான் பேசவில்லை; எனது

அனுபவம் பேசுகிறது' என அடிக்கடி கூறுவர். வாய்ப்பும் வசதிகளும் மிக்கதும் முன்னேற்றமடைந்ததுமான குடும்பச் சூழ்நிலையிற் பிறந்து புகழ்பூத்த கல்வி நிறுவனங்களிற் பயின்று பல்கலைக்கழகம் புகும் மாணவன் ஒருவன் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் வேறு; வசதி வாய்ப்புகளோ கல்வி வாசனையோ அற்றதும் ஏழ்மை மிக்கதும் மிகப் பின்தங்கிய (பிரதேசம்)துமான ஒரு குடும்பச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்து வறுமையில் வாடிச் சாதாரண கல்வி நிறுவனங்களில் பயின்று பல்கலைக்கழகம் புகும் மாணவன் ஒருவன் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் வேறு.

பாரதியார் தமது 'சின்னச் சங்கரன்' என்னும் கதையிற் கூறியுள்ள ஒரு சம்பவம் பற்றி இவ்விடத்தே நோக்குதல் பொருந்தும். மிகவும் மெலிந்திருந்த பாரதியாரை நோக்கி எட்டயபுரத்து மகாராசா பின்வருமாறு பாரதியாருக்கு ஆலோசனை கூறினாராம்; "நன்றாகச் சாப்பிடப் பழக வேண்டும். சாப்பிடுவதற்கு முன்னர் லேகியம் சாப்பிட்டால் நன்றாகப் பசிக்கும். அதனால், ஆரம்பத்தில் இரண்டு கவளம் சாப்பிடுபவன் நாளடைவில் இருபது கவளத்துக்கு மேற் சாப்பிட்டு நன்றாகக் கொழுப்பான்." எட்டயபுரத்து மகாராசாவின் கணிப்புப்படி ஏழை மக்கள் மெலிந்திருப்பதற்குக் காரணம் மக்களுக்கு லேகியம் சாப்பிடவோ வயிறுபுடைக்குமாறு இருபது கவளம் உணவு சாப்பிடவோ தெரியாது என்பதே. ஆயின், இருபது கவளமல்ல இரண்டு கவளம் உணவுக்கே தவம் கிடக்கும் மக்களே மிக அதிகம்; அவர்கள் லேகியத்தைப் பற்றியோ சோமபானத்தைப் பற்றியோ அறியார். இந்நிலையில், எட்டயபுரத்து மகாராசாவின் 'உன்னத ஆலோசனைகளை' ஏழை மக்களாற் பின்பற்ற முடியுமா? பாணுக்கு வழியில்லாவிட்டால் கேக்கைச் சாப்பிடுமாறு மன்னன் ஒருவன் ஆலோசனை கூறியமையும் இவ்விடத்தே நினைவு கூரத்தக்கது. உலகிலே இடம்பெற்று வரும் இடையறாப் போராட்டங்

களுக்கும் புரட்சிகளுக்குமான மூலகாரணங்கள் பற்றியும் தலைமுறை முரண்பாடுகள் தோன்றுவதற்கும் பெருகுவதற்குமான காரணங்கள் பற்றியும் சிந்தித்துப் பார்த்தல் அவசியம்.

காலத்துக்குக் காலம் இளந்தலைமுறையினர் வாழும் சூழ்நிலை கணிசமான அளவோ அதிக அளவோ வேறுபடுகின்றது. அதற்கேற்ப அத்தலைமுறைகள் பெற்றுக் கொள்ளும் அனுபவங்களும் வேறுபடுகின்றன. அத்தகைய வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொண்ட இளந் தலைமுறையானது முதிய தலைமுறையாகும்போது தான் இளமையில் பெற்றுக் கொண்ட அனுபவங்களினூடாகவே தனக்குப் பின் வரும் இளந்தலைமுறையை நோக்குகின்றது. ஆயின், அந்த இளந்தலைமுறை பெறும் அனுபவங்களோ வேறுபட்டனவாக அமைகின்றன. இவற்றை உள்ளபடி உணரத்தவறுமிடத்து முரண்பாடுகள் வெடித்துக் கிளம்புகின்றன.

அன்றைய இளந்தலைமுறை கண்ட சூழ்நிலையும் சமுதாயமும் உலகும் பெற்றுக் கொண்ட அனுபவங்களும் அறிவும் வேறு. இன்றைய இளந்தலைமுறை கண்டு கொண்டிருக்கும் சூழ்நிலையும் சமுதாயமும் உலகும் பெற்றுக் கொள்ளும் அனுபவங்களும் அறிவும் வேறு.

மனிதகுல வரலாற்றில் முன்னர் என்றுமே காணப்படாத அளவிற்கு உலகளாவிய ரீதியில் இன்றைய இளந் தலைமுறையினர் மத்தியில் வன்செயல் நாட்டமும் அமைதியின்மையும் விரக்தியும் கொந்தளிப்பும் ஏற்படுதவற்கான காரணங்கள் பற்றிப் பொறுமையோடு சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகும்.

முன்னர் என்றுமே காணப்படாத அளவிற்கு இன்று அசுர வேகத்தில் விஞ்ஞான, தொழிநுட்பத்துறைகளும் தொடர்பு சாதனங்களும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றினால் ஏற்படும் சாதகமான விளைவுகளை மட்டுமன்றிப் பாதகமான விளைவுகளையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

பொதுவாகவே இளம் பருவத்தினர் மன உளைச்சல் மிகுந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இன்றைய இளம் பருவத்தினரது மன உளைச்சல்களோ மிக அதிகம் எனலாம். அதற்கான காரணம் இன்றைய சூழ்நிலைகளே குழந்தைப் பருவத்தில் கள்ளம் கபடமின்றியும் கவலைகளின்றியும் பருவக் கிளர்ச்சிகளின் பாதிப்புகளின்றியும் துள்ளித் திரியும் குழந்தைகள் விடலைப் பருவம் அடைந்ததும் (Teensage) (ஏறத்தாழ 13 வயது முதல் 19 வயது வரை) ஆணும் பெண்ணும் தங்களைப் பற்றி அதிகம் சிந்திக்கத் தொடங்குகின்றனர். உணர்வுகள் கிளர்ந்தெழும் பருவத்தில் தமது எதிர்கால வாழ்வு, படிப்பு முதலியனபற்றித் தீவிரமாக எண்ணத் தலைப் படுகின்றனர்; பால் கவர்ச்சி, உள்ளக்கிளர்ச்சி ஆகியவையும் அவை தொடர்பான பிரச்சினைகளும் மன உளைச்சல்களும் கவலைகளும் பல்வேறு காரணங்களினால் ஏற்படும் தாழ்வுச் சிக்கல்களும் அவர்களை மிகுதியாகப் பாதிக்கத் தொடங்குகின்றன. மரபார்ந்த கட்டுப்பாடுகளில் பழக்கப்பட்ட அவர்கள் அவையெல்லாவற்றையும் மற்றையவர்களிடம் மனந்திறந்து சொல்லவோ அவற்றுக்குப் பரிகாரம் தேடவோ கூச்சப்படுவர்; அச்சம் கொள்வர். இதனாற் போலும் இப்பருவத்தினை அறியாப்பருவம் என்பர்.

இத்தகைய உபாதைகளையெல்லாம் கல்நெஞ்சையும் கரைய வைக்கும் திருவாசகத்தைப் பாடியவரும் புலனடக்கம் மிகுந்தவரும் பிரமச்சாரியுமான மணிவாசகர் "------- யானை முதலா யெறும்பீறாய --- எனத் தொடங்கி, ----

தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
--- --- இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
--- --- --- ---"

(திருவாசகம், போற்றித்திருவகவல்)

என இளவயதில் தாம் எத்தகைய உபாதைகளிலிருந்தெல்லாம் தப்பிப் பிழைத்தார் என அடுக்கிச் செல்வது அவதானிக்கத் தக்கது. ஆயின் சாதாரண விடலைப் பருவத்தினரால் அதுவும் இன்றைய 'நவ நாகரிக'ச் சூழ்நிலையில் இவ்வாறெல்லாம் தப்பிப் பிழைக்க முடியுமா?

மன உளைச்சல்களுக்கும் தாழ்வுச் சிக்கல்களுக்கும் அதிக அளவில் உள்ளாகும் பருவம் (அழகு-அழகின்மை, குட்டை-நெடில், வலிமை-வலிமையின்மை, உடற்கட்டு-ஒல்லி-அதிக பருமன், கறுப்பு-மஞ்சள்-வெள்ளை, செல்வம்-வறுமை, குடும்பச் சூழ்நிலை முதலியன தொடர்பான ஏற்றத்தாழ்வுகள், தாய்-தந்தையரின் நிலை, இளமைப்பருவம் இவ்வகையிலே அன்றைய இளந்தலைமுறையினரிலும் பார்க்க இன்றைய இளந்தலைமுறையினரைப் புறச் சூழ்நிலைகளும் அகச் சூழ்நிலைகளும் வெகுவாகப் பாதிக்கின்றமை கண்கூடு. அவற்றால் அவர்கள் படும் அவஸ்தைகளும் மிக அதிகம்.

தொடர்புச் சாதனங்களின் இன்றைய துரித வளர்ச்சியும் கொள்ளை இலாபமீட்ட முனையும் `மோகமும் லாப நோக்கு ஒன்றையே பிரதான நோக்காகக் கொண்டு (திரைப்படம், தொலைக்காட்சி, பத்திரிகைகள்) மேற்கொள்ளப்பட்டு வரும் குரூரத்தனமான விளம்பர முயற்சிகளும் பிறவும் பருவ உணர்வுகள் கிளர்ந்தெழும் பருவத்தினரை எவ்வாறெல்லாம் வாட்டி வதைக்கின்றன; ஒழுக்கப் பிறழ்வுகளுக்கு வழிவகுக்கின்றன; வன்செயல்களுக்குட்படுத்துகின்றன என்பன பற்றிக் கவலைப்படுபவர்கள் மிகக் குறைவே எனலாம்.

பணத்தையும் சுகபோகங்களையும் பெருக்கிக் கொள்வதையே வாழ்க்கையின் பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் 'பணமுதலை'களுக்குப் 'பிஞ்சு' களின் மன உளைச்சல்களையும் சீரழிவுகளையும் பற்றிக் கிஞ்சித்தேனும் கவலை கிடையாது. இன்றைய தொடர்பு சாதனங்களில் பாலியல் தொடர்பாக (இவ்விடத்தே பாலியல் தொடர்பான விளம்பரங்களுக்கும் பாலியல் கல்விக்குமிடையிலான பாரிய வேறுபாட்டினை நாம் மனங்கொளல் வேண்டும்). இடம்பெறும் (எத்தகைய தணிக்கைகளையும், மீறி) விளம்பரங்களினால் எற்படும் பாரதூரமான விளைவுகளை மனங்கொளல் வேண்டும். பத்திரிகைகள், திரைப்படம், தொலைக்காட்சி முதலியன மட்டுமன்றி மிக அண்மையில் எமது நாட்டுக்கு அறிமுகமாகிய சர்வதேச வலைத்தொடர்பி (InterNet), மின்அஞ்சல் (E.Mail) முதலியனவும்கூட துரதிஷ்டவசமாகப் பாலியலை மூலதனமாகக் கொண்டு கொள்ளை இலாபமீட்ட முனைவதையும் அவை இளந்தலைமுறையினரைப் பாதிக்குமாற்றையும் அவதானிக்க வேண்டும். இன்றைய உலகின் கலாச்சாரச் சீரழிவிற்கான முக்கிய காரணங்களுள் இவையும் முக்கியம் பெறுகின்றன என்பதில் ஐயமில்லை.

இன்று எங்கு பார்த்தாலும் பாலியல் வன்செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகம், கற்பழித்துக் கொலை செய்தல், கொலை செய்து கற்பழித்தல், அதற்காகக் குடும்பம் முழுவதையும் கொலை செய்தல், பருவமடையாத ஏழைச் சிறுமிகளைக் கோடீஸ்வரர்கள் விலைக்கு வாங்கிச் செயற்கை முறையில் பருவமடையச் செய்து, அச்சிறுமிகளைப் பாலியல் இம்சைகளுக்கு உட்படுத்தல், மேலைநாடுகள் சிலவற்றில் கல்வித் தலங்களுக்குச் செல்லும் விடலைப்பருவ மாணவிகளை நோக்கிப் பெற்றோர்கள், 'எதனையெடுத்துச் செல்ல மறந்தாலும் கருத்தடை மாத்திரையை எடுத்துச் செல்ல மறக்காதே' என எச்சரிக்கை செய்தல், எயிட்ஸ் நோய் பற்றிய அச்சுறுத்தல் இத்தியாதி.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இடம் பெற்றுக் கொண்டிருக்கும் குரூர வக்கிரங்கள் நிறைந்த போர்ச்சூழ்நிலை, பலப்பரீட்சை முதலியன காரணமாகவும் பிறகாரணங்களினாலும் பல இலட்சக் கணக்கான இளந் தலைமுறையினர் புலம் பெயரலாயினர். இவர்களுட் கணிசமா னோர் புகலிடம் தேடி மேலை நாடுகளுக்குச் செல்லலாயினர்; இன்னொரு பகுதியினர் அகதிகளாகித் தமிழகத்துக்குச் செல்லலாயினர்; மற்றொரு பகுதியினர் இந்நாட்டிற்குள்ளேயே அடிக்கடி இடம் பெயர்ந்து உடைமைகள் யாவற்றையும் இழந்து அகதிமுகாம் வாழ்க்கையே தஞ்சமென வாழ வேண்டிய பரிதாப நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

புகலிடம் தேடி மேலை நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த இளந்தலைமுறையினர் பலர் மேலை நாடுகளின் கலாசாரச் சீரழிவுகளுக்கு அடிமையாகிக் கொண்டிருப்பதாகவும் தங்களது பாரம் பரியச் சமய, சமூக விழுமியங்களை அலட்சியப் படுத்துவதாகவும் அடிக்கடி செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. நீண்டகால வாழ்வியல் பற்றிய உண்மைகளே

நாளடைவில் சமய உண்மைகளாகவும் சமய, சமூக, மானிட விழுமியங்களாகவும் மாறலாயின என்பதை நாம் மனங்கொளல் வேண்டும். மேலைநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தோருட் பலர் அடிக்கடி தாம் பிறந்து வளர்ந்த மண்ணோடு கொள்ளும் தொடர்புகளாலும் மேலைநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வரவு அதிகரிப்பினாலும் தொலைக்காட்சி முதலியவற்றாலும் நல்ல பல பண்புகள் மட்டுமன்றித் தீயனவும் வேகமாகப் பரவிக் கொண்டிருப்பதை நாம் மனங்கொளல் வேண்டும்.

'அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி', 'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்!' என்னும் ஆன்றோர் வாக்குகள் சிந்திக்கத்தக்கவை. இன்றைய உலகின் புகழ்பூத்த ஜனாதிபதிகள் முதல் அபிவிருத்தியடையாத நாடுகளின் உயர் அதிகாரிகள் வரை அவர்கள் மீது சுமத்தப்படும் பாலியல், இலஞ்ச ஊழல்கள் முதலியன தொடர்பான குற்றச்சாட்டுகளும் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்போ முடிந்த பின்போ அவர்களுட் பலர் சிறைவாசம் அனுபவிப்பதும் 'நாட்டை விட்டோடுதலும் பிறவும் எதிர்காலம் எப்படியாகுமோ என்னும் ஏக்கத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன.

இன்றைய உலகம் ஒரு சிற்றூராக (Global Village) மாறிக் கொண்டிருக்கின்றது. இனங்களின் தனித்துவங்கள் பல சிதைந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞான. தொழிநுட்ப, தகவல் தொடர்பு சாதனங்களின் தீவிர வளர்ச்சியும் திறந்த பொருளாதார நடவடிக்கைகள் முதலியனவும் உலகமயமாதலை (Globalization) வேகப்படுத்திக் கொண்டிருக்கும்போது மரபார்ந்த சமய, சமூக விழுமியங்கள் பல அலட்சியப்படுத்தப்படுகின்றன. ஏறத்தாழப் பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இளந்தலை முறையினராக மேலை நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தோர் இன்று இரண்டாம் தலைமுறையினராக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மரபார்ந்த சமய, சமூக விழுமியங்களில் ஊறியிருந்த அவர்கள் தமது

பிள்ளைகளின் சமகால நடத்தைகளையும் ஒழுக்க மீறல்களையும் தான்தோன்றித்தனமான போக்குளையும் கண்டு அதிகம் வேதனைப்படுவதை அவதானிக்க முடிகின்றது. புலம் பெயர்ந்தவர்களது மனஏக்கங்களும் தவிப்புகளும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய அச்சமும் இன்று பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுகதைகள், கவிதைகள் நூல்கள் முதலியவற்றின் வாயிலாக வெளியாகிக் கொண்டிருப்பதை அவதானிக்கிறோம்.

உலகின் பல்வேறு பாகங்களிலும் இடம் பெற்றுக் கொண்டிருப்பது போலவே இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் பிறபாகங்களிலும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட இளந்தலை முறையினர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் வேறு; கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட இளந்தலைமுறையினர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் வேறு; இன்றைய இளந்தலைமுறையினர் பெற்றுக் கொண்டிருக்கும் அனுபவங்களும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சவால்களும் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனைகளும் சோதனைகளும் முன்னையவற்றிலிருந்து எத்துணை வேறுபட்டவை என்பதை நாம் மனங்கொளல் வேண்டும்.

இளந்தலைமுறையினராக நாம் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயின்று கொண்டிருந்த காலை உலக நிலையாமை, வாழ்வின் அநித்தியம், போர்க்கொடுமை, பேரழிவுகள் முதலியன பற்றி அதிக அளவில் இலக்கியங்கள் வாயிலாகவே அறிந்தோம். ஆயின் இன்றைய இளந்தலைமுறையினருக்கு மேற்கூறியவை பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கியங்களைத் தேட வேண்டிய அவசியமில்லை. மரணங்கள் மலிந்துவிட்ட பூமியில் மரணத்துள் வாழ்ந்து கொண்டிருக்கும் இளந்தலை முறையினர் மரண பயம் அற்றவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள்;

குரூரவக்கிரங்களையும் பேரழிவுகளையும் அராஜகத்தையும் நாள்தோறும் பார்த்துப் பார்த்து உள்ளம் மரத்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள்; மனோவைராக்கியம் மிகுந்தவர்களாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய கொடூர அனுபவங்களை இன்றைய இரண்டாம் மூன்றாம் நான்காம் தலைமுறையினர் தமது இளமைக் காலத்தில் பெற்றுக் கொண்டதில்லை, (முதலாம் உலகப் போரும் இரண்டாம் உலகப் போரும் ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பான் முதலிய நாடுகளிலும் ஏற்படுத்திய அளவு பாதிப்புகளை எமது நாட்டில் ஏற்படுத்தவில்லை. அப்போர்கள் ஒவ்வொன்றும் ஐந்து வருடங்களுள் முடிவடைந்துவிட்டன.) பெற்றிருந்தாலும் மிக மிகச் சொற்பமே. யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், புத்தளம், சிலாபம்– மொத்தத்தில் இலங்கை என்னும் குறுகிய வட்டங்களை விடுத்து நாம் உலகளாவிய ரீதியில் இவற்றை நோக்கினால் கால அடிப்படையில் சற்று முன் பின்னாகச் சோமாலியா, எதியோப்பியா, சூடான் முதலிய ஆபிரிக்க நாடுகள், வியட்னாம், சோவியத் யூனியன் பிளவுண்டதைத் தொடர்ந்து பிரிந்து சென்ற நாடுகள், அயர்லாந்து, காஷ்மீர் பிரதேசம் என எத்தனையோ நாடுகளையும் பிரதேசங்களையும் சேர்ந்த இளந்தலை முறையினரின் அவலங்களை அவதானிக்க முடியும்.

மனிதனிடம் பொருளாதார வேட்கையும் உலக சுகபோக நாட்டமும் மிகுதியும் மேலோங்குமிடத்துக் காலம் காலமாகப் போற்றப்பட்டு வரும் மனித விழுமியங்கள் காலடியிற் சிக்கிச் சீரழியும் நிலை ஏற்படுகின்றது; அன்பு, பாசம், கருணை, சத்தியம், நேர்மை, தியாகம் முதலியன அருகிச் சமுதாயம் அமைதியிழந்து தவிக்க நேரிடுகின்றது. காலம் காலமாகப் போற்றப்பட்டு வந்த மனித விழுமியங்கள் பலவற்றை இன்று மனிதரிடத்துக் காண்பதிலும் மிருகங்களிடம் காண்பது சுலபமாக உள்ளது. மனிதன் மனிதனாகவும் அமைதியாகவும்

மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்குச் செல்வச் செழிப்பு மட்டும் போதுமா? விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் மிகுந்த முன்னேற்றமும் செல்வச் செழிப்பும் மிக்க உலக நாடுகள் பலவற்றிலேயே ஆகக்கூடுதலான மனநோயாளிகளும் கொலையாளிகளும் வன்செயல் நாட்டம் மிகுந்தோரும் காணப்படுகின்றனர். குரூர வக்கிரங்களும் கொலை கொள்ளைகளும் பாலியல் வன்முறைகளும் ஒழுக்கப்பிறழ்வுகளும் மலிந்து காணப்படுகின்றன.

உலகின் இளந்தலைமுறையினரது வரலாற்றில் 1960களை மிக முக்கியமானதொரு காலகட்டமாகக் கருதுவர். முதலாம் இரண்டாம் உலக மகாயுத்தங்கள், அவை ஏற்படுத்திய பெரும்பாதிப்புகள், ஏகாதிபத்தியங்களின் வீழ்ச்சி, 1917ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரஷ்யாவில் ஏற்பட்ட மாபெரும் புரட்சி, அவற்றைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பாவிலும் சீனா முதலிய கீழைத்தேய நாடுகளிலும் ஏற்பட்ட புரட்சிகள், மாற்றங்கள், பொதுவுடைமைக் கருத்துகளின் பரம்பல், முற்போக்குச் சிந்தனைகளின் வளர்ச்சி, அரசியல், தொழில்நுட்ப மாற்றங்கள் முதலியவற்றின் விளைவாக 1950களின் பிற்பகுதியிலும் 1960களின் முற்பகுதியிலும் பிரான்சிலும் அதனைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் முன்னர் என்றுமில்லாதவாறு இளந்தலைமுறையினரின் எழுச்சி காணப்பட்டது. இவற்றின் உடனடித்தாக்கத்தினை ஏனைய நாடுகளில் போன்றே இந்தியாவிலும் இலங்கையிலும் காண முடிகின்றது.

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலேயே முன்னர் என்றும் இல்லாத அளவிற்கு மாணவர்களுக்கும் பல்கலைக்கழக உயர் அதிகார பீடத்திற்குமிடையில் முரண்பாடுகள் முற்றி இறுதியில் கலவரமாக மாறியது. இவ்விடத்தே இளைய தலைமுறையினரின் எழுச்சியுடன் வேறு சிலவிடயங்களையும் ஒருங்கே சேர்த்துப் பார்த்தல் அவசியமாகும். மிக

நீண்டகாலமாக அரசியல் சமூக, பொருளாதார பண்பாட்டு ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த சமூகங்களும் சமூகப் பிரிவுகளும் இனங்களும் பின்தங்கிய பிரதேசங்களும் நாடுகளும் சமூகத்தின் அடித்தள மக்களும் பெண்களும் விழிப்புற்று எழுச்சியுறத் தொடங்கியதும் உரிமைகள் கோரியும் விடுதலை வேண்டியும் கிளர்ச்சிகளிலும் போராட்டங்களிலும் ஈடுபடத் தொடங்கியதும் எறத்தாழ இதே கால கட்டமாகும். நீண்ட காலமாக அரசியல் பொருளாதார சமுதாய ரீதியாக மேலாதிக்கம் செலுத்தி வந்ததோருக்கும் விழிப்புற்று எழுச்சியுறத் தொடங்கியவர்களுக்குமிடையிலான முரண்பாடுகளும் மோதல் களும் பல நிலைகளாகப் பரிணமிக்கலாயின; அவை தொடர்ந்து நாளுக்கு நாள் தீவிரம் பெற்று வருவதை இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கணும் காணக்கூடியதாக உள்ளது. "பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பா முழுவதும் சளிபிடிக்கும்" என்பது நெப்போலியன் காலத்துப் பழமொழி, ஆயின், இன்று "உலகின் எங்காவது ஒரு மூலையில் தும்மல் ஏற்பட்டால் உலகம் முழுவதும் சளிபிடிக்கும்" என்னும் நிலை இன்றைய தொடர்பு சாதனங்களின் துரிதவளர்ச்சியினால் வளர்ந்து வருகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1981ஆம் ஆண்டு இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்திய புகழ்பூத்த பேராசிரியர் ஒருவர், 1960களின் ஆரம்பத்திலிருந்து பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை ஏற்படுவதற்கான காரணங்களை விரிவாகக் குறிப்பிட்டிருந்தார். அவற்றுள் முக்கியமான ஒரு விடயம் வருமாறு: "முள்ளுக் கரண்டியினால் சாப்பிடும் குடும்பங்களில் பிறந்து வளர்ந்தவர்களே பல்கலைக் கழக மேலதிகாரிகளாகவும் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர் களாகவும் மாணவர்களாகவும் விளங்கிய வரைக்கும் பல்கலைக்கழக அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டது மிக மிகக் குறைவே. ஆயின் இந்நிலைமை மாறி முள்ளுக் கரண்டியினால்

சாப்பிடும் குடும்பங்களில் பிறந்து வளர்ந்தவர்களே பல்கலைக் கழக மேலதிகாரிகளாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த அதேவேளை, 1960களின் ஆரம்பத்திலிருந்து (பல்கலைக்கழகம் வரையிலான தாய் மொழிக்கல்வி விருத்தி, இலவசக் கல்வி விருத்தி முதலியன காரணமாக) நாட்டின் பின்தங்கிய பிரதேசங் களிலிருந்தும் பின்தங்கிய கிராமங்களிலிருந்தும் பின்தங்கிய ஏழைக் குடும்பங்களிலிருந்தும் பிரபலமற்ற வித்தியாலயங்கள், மகாவித்தியாலயங்கள் முதலியவற்றிலிருந்தும் முள்ளுக் கரண்டியினால் சாப்பிடத் தெரியாத—சாப்பிட்டறியாத மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைந்ததைத் தொடர்ந்தே முரண்பாடுகள் அதிகரித்து மோதல்களும் அமைதியின்மையும் ஏற்படலாயின.'' அவரது இக்கூற்று ஊன்றிநோக்கத்தக்கது புரிந்துணர் வின்மையே பிரச்சினைகள் யாவற்றுக்கும் மூல காரணம் என்பதை நாம் மனங்கொளல் வேண்டும்.

இளந்தலைமுறையினரது எழுச்சியின் முக்கிய பண்புகளுள் ஒன்றாக அவர்களது அரசியல் ஆர்வம் காணப்படுகிறது. இதனை எவரும் எளிதில் அலட்சியம் செய்ய முடியாது. 1967ஆம் ஆண்டு பிரான்சில் ஏற்பட்ட இளந் தலைமுறையினர் எழுச்சி, உலகப் புகழ்பெற்ற அமெரிக்க—வியட்நாமியப் போர், 1970களின் ஆரம்பத்திலிருந்து சிங்கள மக்கள் மத்தியில் உருவாகிய ''சேகுவேரா'' (ஜாதிக விமுக்தி பெரமுன), தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிய 'இளைஞர் பேரணி', அதன் செயற்பாடுகள், அதன் இன்றைய வளர்ச்சி நிலை, உலக நாடுகள் பலவற்றின் கவன ஈர்ப்பு, 1980களிலிருந்து தமிழ் மாணவ இயக்கத்தின் செயற்பாடுகள், அதன் இன்றைய நிலை முதலியவற்றை நாம் இயன்றவரை புரிந்துகொள்ள முயலுதல் மிகமிக அவசியம். அவ்வாறன்றி அவற்றை முரட்டுத்தனமாக மறுப்பது, 'தீக்கோழி தனது தலையை மட்டும் மணலுக்குள் புதைக்க முயலும் செயலுக்கு' ஒப்பானதாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இன்றைய தொடர்புசாதனங்களின் துரித வளர்ச்சியும் பிறவும் உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சி களையும் உலகச் செய்திகளையும் இளந்தலைமுறையினர் உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இளந்தலை முறையினரின் மனோவளர்ச்சிக்கு இன்றைய சூழ்நிலை கைகொடுத்து உதவுகின்றது. உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அநீதிகளையும் ஊழல்களையும் கொடுமைகளையும் பலவகைச் சுரண்டல்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்புகள் அதிகம். இன்றைய அரசியல், சமூக, சமயத்தலைவர்கள் பலரின் கபட நாடகங்களும் போலித் தனங்களும் இளந்தலைமுறையினர் மத்தியில் வெறுப் புணர்வினையும் விரக்தியையும் வன்செயல் நாட்டத்தையும் ஏற்படுத்துகின்றன.

இன்றைய உலகநாடுகள் அனைத்தும் கூடவோ குறையவோ உரத்தோ மெல்லமாகவோ எயிட்ஸ் நோய், சுற்றாடல் பாதுகாப்பு, மனிதமேம்பாடு, வறுமை ஒழிப்பு, ஆத்மீகம் முதலியன பற்றிக் குரல் எழுப்புவதைக் காணலாம்.

சந்திர மண்டலத்தியல்பு கண்டு தெளிந்த பின் செவ்வாய்க்கிரகம், வியாழக் கிரகம் முதலியன பற்றிய ஆய்வுகள், செயற்கை மனிதனின் (றொபோ) செயற்பாடுகள் பற்றிய முன்னேற்றம், கணனி அறிவியல் முன்னேற்றம், குரலால் தொழிற்படும் கணனிகள், ஒளிக்கணனிகள், Fax, E-Mail (மின்அஞ்சல்), Voice Mail, ஐதரசன் எரிபொருட்கல வாகனங்கள் முதலிய இத்தியாதி கண்டுபிடிப்புகளும் செயற் பாடுகளும், செயற்கை முறைக் கருத்தரிப்புகள், மிக நுட்பமான சத்திரசிகிச்சை முறைகள் இத்தியாதி ஒருபுறம்.

எயிட்ஸ் நோய் பற்றிய அச்சுறுத்தல், சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய ஓலங்கள், ஓசோன் படலம் பற்றிய

தவிப்புகள், அவை பற்றிய தீவிர ஆய்வு முயற்சிகள், இருபத்தோராம் நூற்றாண்டில் நடக்கப் போகின்றவை பற்றிய ஆரூடங்கள் இத்தியாதி மறுபுறம்.

உலக அரங்கில் எங்கு பார்த்தாலும் போர்க்கொடுமைகள், குரூரங்கள், பேரழிவுகள், மண்டையோட்டுக் குவியல்கள், பெரும் புதைகுழிகள், அவைபற்றிய ஆய்வுகள், மீளாய்வுகள், புலன் விசாரணைகள், ஆணைக்குழு நியமிப்புகள், விலைமதிப்பற்ற மனித உயிர்கள் மிகவும் அற்பமாக மதிக்கப்படுதல், புலம்பெயர்வுகள், அகதி முகாம்கள், அம்முகாம்களில் எலும்பும் தோலுமாகப் பிட்சா பாத்திரங்களுடன் காட்சியளிக்கும் அகதிகள் பட்டினிச் சாவுகள் இத்தியாதி இன்னொருபுறம்.

சமாதானத் தூதுக்கள், பேச்சுவார்த்தைகள், வட்டமேசை மகாநாடுகள், ஐ.நா. சபையின் கோரிக்கைகள், தலையீடுகள், வெண்புறாக்களைப் பறக்கவிடுதல், அதன் மென் சிறகுகளை ஈவிரக்கமின்றி அறுத்தெறிதல், ஏட்டிக்குப் போட்டியான அணுகுண்டுப் பரிசோதனைகள் இத்தியாதி மற்றொருபுறம்.

இவற்றுக்கு மத்தியில் அல்லாடிக் கொண்டிருக்கும் இன்றைய இளந்தலை முறையினரது போக்குகளையும் செயல்களையும் கண்டு நெற்றிக் கண்ணைத் திறப்பதா? அவர்களை அனுதாபக் கண்கொண்டு நோக்குவதா? விரைந்து வந்து கொண்டிருக்கும் இருபத்தோராம் நூற்றாண்டில் அவர்களது செம்மையான வாழ்வின் பொருட்டுச் செய்யத்தக்கவை யாவை? என்பன பற்றிச் சிந்தித்தல் மிக மிக அவசியமானது.

ஒரே சீராக ஓடிக்கொண்டிருக்கும் மனித வாழ்க்கையானது பல்வேறு காரணங்களால் 'தாறுமாறாக' அமையும்

போது மனித மனமும் பேதலிக்கின்றது; வக்கிரமடைகின்றது; வேறு வழியற்ற நிலையில் வன்செயலை நாடுகின்றது.

இன்றைய உலகில் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்; ஆயின், மானிடம் செத்துக் கொண்டிருக்கிறது. நவீன மனிதர்களிடம் எல்லாம் உள்ளன. ஆயின், அமைதியான வாழ்வு இல்லை; நிம்மதியில்லை. இன்றும்கூட மிகப் பின்தங்கிய பிரதேசங்களிலும் மிகப் பின்தங்கிய கிராமங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும், நவநாகரிகத்தை அறியாத பாமர மக்களும் கல்வி வாசனையே அற்ற ஆதிவாசிகளும் வேடர்களும் நவ நாகரிக மனிதர்களிலும் பார்க்க மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தே நாம் ஓரளவாவது 'மானிடத்தை'க் காணமுடிகின்றது.

இன்றைய விந்தனை வேடுவர்களின் தலைவன் ஊறுவரிகே வன்னியா அவர்கள் நவீன உலகம் பற்றியும் நவநாகரிக மனிதர்கள் பற்றியும் அண்மையில் தெரிவித்துள்ள கருத்துகள் எம்மைப் பிரமிப்படையச் செய்கின்றன; ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றன. அவர் தெரிவித்துள்ள கருத்துகளுட் சில வருமாறு;

நாம் இந்த இயற்கைச் சூழல் சுற்றாடலோடு ஒட்டிய நிலையில் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வருகின்றோம். கிடைப்பதைக் கொண்டு உண்டு அருந்தித் திருப்தி அடைகிறோம் நிம்மதியாக அச்சம் பீதியற்ற சூழ்நிலையில் படுத்து உறங்கிக் காலையில் உற்சாகத்துடன் எழுகின்றோம்.

ஒருவரையொருவர் எதிர்த்துப் பகைமை பாராட்டி வெட்டி வீழ்த்திக் கொலை செய்து உடைமைகளை அழித்து வாழ வேண்டும் என்ற நிலை எம்மிடமில்லை.

ஆனால், எல்லாவகையிலும் மிகவும் உயர்வான நிலையில் இருக்க வேண்டிய நீங்கள் அச்சம் பதற்றம் நிறைந்த ஒரு சூழலில் வாழ்கின்றீர்கள்.

அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு நீங்கள் இதுவரையில் சாதித்ததுதான் என்ன? நீங்கள் இன்றுவரை சாதித்திருப்பது உங்களை நீங்களே அழித்துக் கொள்ளும் வகையில் சாதனங்களை உற்பத்தி செய்திருப்பதுதான்.

மனிதர்களாகிய நாம் அனைவரும் ஒரே பிரிவினர் தான் என்ற உணர்வு எம்மிடமிருந்து தூரவிலகிச் சென்று விட்டதால்தானே இத்தகைய அனர்த்தங்கள் நிகழ்கின்றன?

நாம் இனத்தால் மதத்தால் மொழியால் வேறுபட்டாலும் நாம் அனைவருமே மனிதர்கள்தான். இந்நிலையில், ஒருவருக் கொருவர் பகைமை பாராட்டிக் கொள்வது ஏன்?

இவற்றைப் பார்க்கும்போது அபிவிருத்தி, நாகரிகம் என்ற எதையும் அறியாத நாம் (ஆதிவாசிகள்) உங்களை விட மேலானவர்கள் என்றே கருதத் தோன்றுகிறது. நாம் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்ந்து வருகிறோம்.----" (வீரகேசரி, 26-7-1998, பக். 26).

அமெரிக்காவைச் சேர்ந்த சமூகவியற் பேராசிரியர் ஒருவர் பலவருடங்களாக மேற்கொண்ட ஆய்வுகளின் பின்னர் பெற்றுக் கொண்ட முடிவு; பொருளாதாரச் செழிப்பு மிக்க அமெரிக்க மக்களிலும் பார்க்க வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் இந்திய மக்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்கின்றனர் என்பதேயாகும்.

மேற்கண்ட நிலைமைகளால் இன்றைய உலகம் பின்நோக்கி ஓடவும் முடியாது. முன்னோக்கி விரைந்து கொண்டிருக்கும் நவீன உலகில் மிக விரைவில் வரவிருக்கும் இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் மேற்கொள்ள வேண்டியவை யாவை?

இவை பற்றி முதிய தலைமுறையும் இளைய தலைமுறையும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்; செயற்பட வேண்டும். இப்பாரிய பொறுப்பு முதிய தலைமுறையினரிலும் பார்க்க இளைய தலைமுறையினரையே அதிகம் சார்ந்துள்ளது எனலாம். முதிய தலைமுறையினரின் வாழ்க்கை அநேகமாக முடிவுற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை, இளந்தலை முறையினரது வாழ்க்கை ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது எனலாம். எதிர்கால உலகம் இளந்தலைமுறையினருடையதே. அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பும் அவர்களுடையதே. அதே சமயம் அவர்களுக்குப் பின்னால் உருவாகிக் கொண்டிருக்கும் அடுத்த இளைய தலைமுறையினர் இன்றைய இளைய தலைமுறையினரை மூர்க்கத்தனமாகக் கண்டிக்காத அளவிற்கு அவர்களது செயற்பாடுகள் அமைய வேண்டுவதும் மிக அவசியமானதே.

## V

# இளந்தலைமுறையினரும் இன்றைய கல்வியும்

கல்வியின் முக்கியத்துவத்தை உள்ளபடி உணர்ந்து செயற்பட்டு வரும் ஒரு யுகத்திலே இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமுதாய மேம்பாட்டுக்குக் கல்வியானது எத்துணை இன்றியமையாதது என்பதனை இங்கு நாம்

வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை. வாய்ப்பும் வசதிகளும் மிக்கவர்களுக்கே கல்விச் செல்வம் உரியது என்னும் நிலைமாறி மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களும் கல்வி கற்கக் கூடிய சூழ்நிலை இன்று வேகமாக அதிகரித்து வருகிறது.

தாய்மொழிக் கல்வி விருத்தி, இலவசக் கல்வி விருத்தி முதலியன மட்டுமன்றி மகாபொல புலமைப்பரிசில் முதலியனவும் ஏழை மக்களைக் கல்வியின் பால் மிகுதியான நாட்டம் கொள்ளச்செய்கிறது. எமது நாடு இன்றுவரை மேற்கொண்டு வரும் இலவசக் கல்வித் திட்டம், இலவச நூல் விநியோகம், புலமைப்பரிசில்கள் முதலியவற்றால் ஏழை மாணவர்களிலும் பார்க்க நடுத்தர, மேல் தட்டுவர்க்கங்களைச் சேர்ந்த மாணவர்களே அதிக அளவு நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது கல்வியியல் அறிஞர் சிலரின் கருத்தாகும். இதனை இலகுவில் எவரும் மறுக்க முடியாது.

'பிச்சைபுகினும் கற்கை நன்றே', 'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்; கடையரே கல்லாதவர்', 'கல்வி கரையில கற்பவர் நாள் சில', 'கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு' என வரும் ஆன்றோர் வாக்குகளை இளந்தலை முறையினர்– குறிப்பாக ஏழை மாணவர்கள் அல்லும் பகலும் மனங்கொள வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். கல்வி என்பது பணம் கொடுத்து வாங்கும் பொருளல்ல; நாளும் பொழுதும் நின்றும் இருந்தும் கிடந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய அரும் பெரும் சொத்தாகும்.

மிக நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ள தமிழ் மக்களது கல்வியியல் வரலாற்றைக் கூர்ந்து நோக்குமிடத்துக் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் கல்வி முறையிலும் கல்வித் திட்டங்களிலும்

எத்தனை எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன என்பதையும் தென்கிழக்காசியாவின் கல்வி வளர்ச்சியில் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரை தமிழகம் ஒருமைய நிறுவனமாகத் திகழ்ந்து வந்துள்ளதையும் அதன் பிரதான நகரங்கள் பல மொழி, இன, மத பேதங்களற்ற கல்வி நிறுவனங்களைக் கொண்டு விளங்கியவாற்றையும் தமிழகத்திற்கு அயலிலே அமைந்துள்ள இலங்கைக்கே கல்வித்துறையில் வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளவாற்றையும் மிக நம்பகரமான வரலாற்றாதாரங்கள் மூலம் தெளிவாக அறிய முடிகின்றது. இவை பற்றிய ஆய்வில் வண. பிதா தனிநாயக அடிகளார் ஒப்பற்றதோர் இடத்தினைப் பெற்றுள்ளார்.

இத்தகையதொரு நீண்ட காலப் பின்னணியிலே எமது கல்வி வரலாற்றை நோக்குமிடத்து இருபதாம் நூற்றாண்டின் இறுதியை எய்திக் கொண்டிருக்கும். இன்றும் கூட நாம் பல வழிகளிலும் தமிழகத்தையே ஆதாரமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம் என்பது ஆழமாகச் சிந்திக்கத் தக்கது.

காலத்துக்குக் காலம் ஏற்படும் அவசியத் தேவைகளும் நிர்ப்பந்தங்களுமே புத்தம் புதிய கண்டு பிடிப்புகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றன என்பது பொதுவானதொரு உண்மையாகும். இவற்றின் பின்னணியிலே நாம் நோக்கும்பொழுது மிக நீண்டகாலமாக நிலவி வந்துள்ள குருகுலக் கல்வி முறை (அதன் குறைகளும் நிறைகளும் பற்றி இன்றுவரை அறிஞர்கள் பலரும் அலசிக் கொண்டே இருக்கின்றனர். ஆயின் எவருமே திட்டவட்டமான முடிவிற்கு இதுவரை வரவில்லை), திண்ணைப் பாடசாலைகள், அவற்றினை அஸ்தமிக்கச் செய்த பிரித்தானிய ஏகாதிபத்தியக் கல்வி முறை, அது இன்று வரை ஏற்படுத்தி வந்துள்ள சாதக பாதகமான விளைவுகள் முதலியனபற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இன்று உள்ளாகியுள்ளோம்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குள் எமக்கு அறிமுகப் படுத்தப்பட்ட பிரித்தானிய ஏகாதிபத்தியக் கல்வி முறையே இன்று வரை சிற்சில மாற்றங்களுடன் எம்மால் பின்பற்றப்பட்டு வருகின்றது என்பதும் அதே சமயம் பிரித்தானியக் கல்விமுறையில் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இற்றைவரை வியக்கத் தக்க வகையில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டும் மீள் பரிசீலனைகள் செய்யப்பட்டும் வருகின்றன என்பதும் எமது அறிஞர் பெருமக்கள் பலரது கவனத்துக்கு உள்ளாகாமை எமது துரதிஷ்டமே.

மேலைநாடுகளில் கல்வியியல் என்பது ஒரு தனித்துறையாகத் துரித வளர்ச்சி கண்டுள்ளது. எமது நாட்டிலும் கல்வியியல் இன்று ஒரு தனித்துறையாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். கல்வியியல் தொடர்பாகப் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளவரும் சார்க் நாடுகளின் கல்வியியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையின் ஆசிரிய பீட ஆலோசகரும் இலங்கையின் தலைசிறந்த கல்வியியலாளர்களுள் ஒருவருமான பேராசிரியர் சந்திர சேகரன் ஓரிடத்தில், "புதிய நூற்றாண்டு நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் 'யாவருக்கும் கல்வி', 'வாழ்க்கை நீடித்த கல்வி', 'யாவருக்கும் விஞ்ஞானக் கல்வி', 'புதிய நூற்றாண்டின் நிலைமைகளை எதிர்கொள்ள இளைஞர்களையும் பாடசாலை மாணவர்களையும் ஆயத்தம் செய்தல் போன்றன கல்வி முறைகளின் புதிய குறிக்கோள்களாக முன்வைக்கப் பட்டுள்ளன. இவற்றை நிறைவேற்ற முறைசார்ந்த பாடசாலை அமைப்பு மட்டும் போதாது என்பதால் அதற்கு மாற்று ஏற்பாடாகவும் சமாந்தரமாகவும் பல முறைசாராக் கல்வி ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்: எழுத்தறிவு மையங்கள், பொதுத் தொடர்பு சாதனங்களான பத்திரிகைகள், அறிவத்துறைச் சஞ்சிகைகள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் என்பன

வற்றினூடாகக் கல்வி அறிவு மாணவர் சமுதாயத்துக்கு மட்டுமன்றிச் சகல மக்கட் பிரிவினர் மத்தியிலும் பரப்பப்பட வேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றுள்ள காலப் பகுதியில் நாம் வாழுகின்றோம். இன்று தனிமனித, சமூக, தேசிய, சர்வதேசிய அபிவிருத்திக்குக் கல்வியின் பங்களிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது போன்று மனித வரலாற்றில் முன்னொரு போதும் உணரப்படவில்லை எனலாம்." (சோ. சந்திரசேகரன், கல்வி வளர்ச்சிச் சிந்தனைகள், முன்னுரை) எனக் கூறியுள்ளமை மனங்கொளத்தக்கது.

இன்றைய மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய பின்னர் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். பரீட்சையில் சித்தியடையாதோர் ஒருபுறமிருக்க, சித்தியடைந்தோர் அனைவரும் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்க முடியாத அளவிற்கு இன்று மிகமிக மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே பல்கலைக்கழகம் செல்கின்றனர். ஏனையோரது நிலை பரிதாபத்திற்குரியதாகவே சில தசாப்தங்களாக இருந்து வந்துள்ளது. இக்குறைபாட்டினைக் குறிப்பிடத்தக்க அளவிற்குப் போக்கும் வகையில் இன்று வெளிவாரிப் பரீட்சை, திறந்த பல்கலைக்கழகம், சட்டக் கல்லூரி, கணக்கியல் கல்லூரி, கணனிக் கல்லூரி, கல்விக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி முதலியன விளங்குகின்றன எனலாம்.

இத்தகைய முன்னேற்றங்கள் காணப்படினும், ஏறத்தாழக் கடந்த இரு தசாப்தங்களாக எமது நாட்டில் நிலவி வரும் நெருக்கடி நிலைமைகளால் மாணவர்கள், குறிப்பாகச் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் இன்னல்கள் பலவற்றுக்கு ஆளாகின்றனர் என்பதும் சவால்கள் பலவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளனர் என்பதும் கவனத்திற்குரியனவாகும்.

மேலும், ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுள் தகுதியுடையோர் பரீட்சை எழுதி எட்டு அல்லது ஒன்பது மாதங்களுள் பல்கலைக்கழகம் சென்று கல்வியைத் தொடரும் வாய்ப்பிருந்தது. ஆயின், இன்றோ பரீட்சை எழுதிய பின் பல்கலைக்கழகம் சென்று தமது கல்வியைத் தொடருவதற்கு இரண்டு வருடங்கள் சில சமயங்களில் அதற்கு மேலும் காத்திருக்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், மாணவர்கள் பலரது கல்வி நாட்டம் குன்றத் தொடங்குகின்றது. வசதி வாய்ப்புள்ள மாணவர்கள் மட்டுமே இருவருடங்களைப் பாழடிக்காது கணனிக் கற்கைநெறி, ஆங்கிலம் கற்றல் முதலிய பயனுள்ள முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்; மாணவர்களுள் ஒரு பகுதியினர் தமது வறுமை மிக்க குடும்பச் சூழ்நிலை காரணமாக ஏதாவது தொழிலைத் தேட முயல்கின்றனர். பெற்றோரின் வற்புறுத்தலினாலும் பிற காரணங்களினாலும் மாணவிகள் பலர் திருமணம் செய்து கொள்கின்றனர். இவை காரணமாக அவர்களது உயர் கல்வி தடைப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

இன்றைய நிலையில், க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக இருவருடங்களையும் பல்கலைக்கழக நுழைவிற்காக இருவருடங்களையும் (சில சமயம் அதற்குமேலும்) பல்கலைக்கழகத்தில் மூன்று முதல் ஐந்து வருடங்களையும் செலவழிக்கும் ஒருவர் பட்டம் பெற்ற பின்னர் வேலை தேடும் படலத்திலும் (அவரவர் குடும்ப, பொருளாதார அந்தஸ்து முதலியவற்றைப் பொறுத்து) குறிப்பிடத்தக்க காலத்தைக் கழிக்கின்றனர். இறுதியில், தொழில் கிடைத்தபின் எத்தனையோ பொறுப்புகளைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம். திருமண பந்தத்தில் இறங்கும் போது தலைமட்டுமன்றி மனமும் நரைத்துவிடும் பரிதாப நிலையே இன்று காணப்படுகிறது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் இன்றைய சூழ்நிலையோ

இவற்றை மேலும் கடினமாக்கிக் கொண்டிருக்கிறது. இவை காரணமாக மாணவர்கள் பலரிடத்து உயர் கல்வியின் மீதான நாட்டம் வெகுவாகக் குறைந்துவிடுகின்றது; வாழ்க்கை பற்றிய அவர்களது சகல நம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்துவிடுகிறது.

நெருக்கடி மிக்க இன்றைய சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கைச் செலவு உயர்வு, குறைந்த சம்பளம் முதலியவற்றாலும் பாடசாலை, கல்லூரி முதலியவற்றின் ஆசிரியர்களும் கல்விமான்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கடந்த பல ஆண்டுகளாக நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலைமை எமது இளந்தலை முறையினரையும் அவர்களது கல்வியையும் எதிர்காலத்தையும் மிக மிக மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. எத்தனை பெரிய கல்வி நிலையங்களும் கட்டிடத் தொகுதிகளும் இருந்தாலும் ஆசிரியர்கள் இல்லாதவிடத்து கல்வியைப் பற்றிக் கற்பனை கூடச் செய்ய முடியாதுள்ளது.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமான கல்வி முறையையே ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தியது. அவற்றால் ஏற்பட்ட 'கோழி மேய்த்தாலும் கொறண மேந்து உத்தியோகம்', 'ரைகட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் கைகட்டிப் பின்செல்பவர்' என்னும் மனப்பாங்கு இன்னும் நம்மவரை விட்டு முற்றாக நீங்கவில்லை. அதற்கேற்ற கல்விமுறையும் இதுவரை வளர்த்தெடுக்கப்படவில்லை. எனினும் இப்பொழுது ஏற்படத் தொடங்கியுள்ள மாற்றங்கள் சில நம்பிக்கையளிப்பனவாக உள்ளன. அரசாங்கங்கள் மாறும்போது மேற்கொள்ளப்படும் அர்த்தமற்ற கல்வித் திட்ட மாற்றங்களும் வெள்ளை அறிக்கைகளும் தவிர்க்கப்படுதல் வேண்டும். கட்சி பேதங்களை மறந்து (நாட்டுக்கும் / இளந்தலைமுறையினர்க்கும் பயன்தரத்தக்கதும் மனிதமேம்பாட்டை வளர்க்கத்தக்க தக்கதும்

காலத்தின் தேவைகளை இயன்றவரை பூர்த்தி செய்யத் தக்கதுமான கல்விமுறையை வளர்த்தல் இன்று அவசியத் தேவையாகும்.

இன்றைய கல்வி முறை நாம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த அளவிற்கு உதவுகின்றது? ஒருவரைச் சுயமாகச் சிந்திக்கவும் சுயமாக இயங்கவும் சீரிய முறையில் நடந்து கொள்ளவும் ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துகின்றதா? மாணவர்கள் தம்மிடம் மறைந்திருக்கும் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்துவதற்கோ பிழைவிட்டுத் திருந்துவதற்கோ இடமளிக்கின்றதா?

இன்றைய கல்விமுறை பரீட்சைப் பெறுபேறுகளையே பிரதான குறிக்கோளாகக் கொண்டு விளங்குவதால் பரீட்சைகளில் ஏற்படும் வெற்றி தோல்விகள் மாணவர்களது உள்ளத்தில் தாழ்வுச் சிக்கல்களையும் விரக்தியையும் ஏற்படுத்துவதாக உள்ளது எனப் பலர் கருதுகின்றனர்.

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியும் அதன் சமய, பண்பாட்டுத் திணிப்பும் நடைமுறைப்படுத்திய கல்வி முறையும் எம்மவர் மத்தியில் ஏற்படுத்திய மனப்பாங்கும் அவநம்பிக்கையும் தாழ்வுச் சிக்கலும் அடிமை மோகமும் வெள்ளையன் நாட்டைவிட்டு வெளியேறி ஐம்பது ஆண்டுகள் கடந்த பின்னரும் முற்றாக அகன்றுவிடவில்லை.

உலகமொழியாகத் திகழும் ஆங்கில மொழி அறிவு அவசியம் வேண்டற்பாலதே. ஆயின் அதற்காக வெள்ளையன் என்ன சொன்னாலும் ஏது செய்தாலும் நாம் கண்ணை மூடிக் கொண்டு அப்படியே பின்பற்றும் நிலையிலேயே இன்றும் உள்ளோம். சுமார் எண்பது வருடங்களுக்கு முன்னரே பிரித்தானிய ஏகாதிபத்தியக் கல்வி முறையை யுகப் பெருங்கவிஞனான பாரதி 'பேடிக்கல்வி' என இகழ்ந்தான்;

அதே சமயம் தேசியக் கல்வி முறையின் அவசியத்தை ஓங்கி ஒலித்தான். எங்களால் முடியுமா? தமிழில் முடியுமா? என்னும் அவநம்பிக்கை குடிகொண்டிருக்கும்வரை எமக்கு விமோசனமே இல்லை.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஏற்படுத்திய மனப்பாங்கு என்னும் தள்ளு வண்டியை நம்பியே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தளர்நடைப் பருவத்தில் தள்ளுவண்டி அவசியமானதாக இருக்கலாம். ஆயின் அப்பருவம் தாண்டியதும் தள்ளு வண்டியை உதறிவிட்டுச் சுயமாகவும் பலமாகவும் நடத்தல் அவசியமானதே. அவ்வாறு நடக்கத் தொடங்கிய ஜப்பான், சீனா முதலிய கீழைநாடுகளும் ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, சுவீடன் முதலிய மேலைநாடுகளும் இன்று வியத்தகு முன்னேற்றங்களைக் கண்டு கொண்டிருக்கின்றன; தத்தமது தாய்மொழிகளை நவீன யுகத்துக்கு ஏற்ப வளர்த்தெடுத்துள்ளன; தங்களது சொந்தக் கால்களில் நிற்கின்றன. நாமோ இன்றும் கூடத் தள்ளு வண்டியைக் கைவிடத்தயாரில்லை. செயற்கைக் காலைக் கழற்றி விட்டுச்சொந்தக் காலில் நிற்கக் கூடிய தைரியத்தை-வலிமையை ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

எமது பிள்ளைகள் படித்து டாக்டராகவோ எஞ்சினியராகவோ அப்புக்காத்தாகவோ வரவேண்டும் என்பதே அதிகமான பெற்றோர்களது நீண்டகாலக் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது. இம்மனோபாவம் இன்றுவரை முற்றாக நீங்கவில்லை. மாணவர்கள் இயல்பாகவே ஆர்வம் கொள்ளும் துறைகளை விடுத்து அவர்கள் ஆர்வங்கொள்ளாத விடயங்களையோ துறைகளையோ பலாத்காரமாக அவர்களிடம் திணிக்க முனைவதால் அவர்களுக்குக் கல்வியில் மட்டுமன்றி வாழ்க்கையிலும் விரக்தியும் வெறுப்பும் ஏற்படுகின்றது; தற்கொலைச் சம்பவங்களும் நிகழ்கின்றன. பெற்றோர்களும் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகின்றனர்.

மாணவர்கள் தமக்கு ஆர்வமான துறைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றில் தமது முழுமையான ஆற்றலை வெளிப்படுத்த முயலவேண்டும்; மனந்தளராது உறுதியுடன் செயற்பட வேண்டும். வைத்தியர்களும் பொறியியலாளர்களும் சட்டத்தரணிகளும்தான் சமூகத்தின் முக்கியஸ்தர்களா? ஆசிரியர்கள் முதல் பேராசிரியர்கள் வரை, எழுதுவினைஞர்கள் முதல் கணக்காய்வாளர்கள் வரை, பதிவாளர்கள் முதல் காசாளர்கள் வரை, புகைப்படக்கலைஞர்கள் முதல் ஓவியர்கள் வரை எல்லோரும் ஒவ்வொரு வகையில் முக்கியஸ்தர்களே என்பதை நாம் மனங்கொளல் வேண்டும். தச்சுத் தொழிலை மேற்கொண்டு நாளடைவில் மரச்சிற்பங்களைச் செய்து உலகப் புகழ்பெற்றுப் போதிய வருவாயினையும் பெற்றுக் கொண்டிருக்கும் இளைஞர்களும் எம்மத்தியில் இருக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்றைய கல்விமுறை பொதுவாக மாணவர்களைப் புத்தகப் பூச்சிகளாக மாற்றி விடுகிறது எனவும் கற்றலை இன்றைய மாணவர்கள் ஒரு பெரும் சுமையாகவே கருதுகிறார்கள் எனவும் பாடத்திட்டங்கள் மிகவும் விரிவடைந்துள்ளன எனவும் குறை கூறப்படுகிறது. 'சிட்டுக் குருவியின் தலையில் பனங்காயைக் கட்டிவிட்டதுபோல்' இன்றைய இளஞ்சிறார்கள் பாடசாலைக்குச் செல்லும்போது தமது நிறையிலும் கூடிய புத்தகப் பைகளைச் சுமக்கமாட்டாது சுமந்து செல்லும் பரிதாபக் காட்சியைக் காணும் போது அவர்களுக்குக் கல்வியின் மீதே வெறுப்பு ஏற்படுவதற்கான காரணங்களை எம்மால் இலகுவிற் புரிந்து கொள்ள முடிகின்றது.

மாணவர்களைச் சிந்திக்க வைக்கும் வகையிலும் ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ளும் வகையிலும் கல்விமுறை அமைதல் வேண்டும். மாணவர்களிடையே பாடங்கள்

தொடர்பான கலந்துரையாடலை நடத்துவிக்க வேண்டும். பாடசாலைகளும் கல்லூரிகளும் மாணவர்களுக்கு வெறுமனே புத்தகப் படிப்பை மட்டும் நல்கும் இடங்களாக விளங்கக் கூடாது. மாணவர்களிடம் மனிதமேம்பாட்டினை வளர்க்க முயலுதல் வேண்டும். நற்குணங்களையும் நன்னடத்தைகளையும் மனஉறுதியையும் உயர்விழுமியங்களையும் வளர்ப்பதற்கும் பேணிப்பாதுகாப்பதற்கும் ஏற்ற இடங்களாக விளங்குதல் வேண்டும்.

உலகின் பல பகுதிகளிலும் இன்று பாலியல் கல்வி முக்கியத்துவம் பெற்று வருவதை அவதானிக்கலாம். பாலியல் தொடர்பாக இளந்தலை முறையினரைச் செவ்வனே ஆற்றுப்படுத்துவதாகப் பாலியல் கல்வி விளங்குகின்றது. பாலியல் கல்வி என்றதும் முதியவர்கள் பலர் அச்சம் கொள்கின்றனர். "பாலியல் கல்வி என்பது ஆண்-பெண் என்னும் இருபாலின் தன்மைகள், அவர்களின் சமூகப் பங்கு, மனித உறவுகள் எனப் பல்வேறு விடயங்கள் பற்றிச் சொல்லும் கல்வியாகும். தன்னுள் எழும் உணர்வுகள் என்னென்ன? அவை ஏன் வருகின்றன. இன்றைய சமூகச் சூழலில் அவற்றை முறைப்படுத்துவது எப்படி? இவை போன்ற பல்வேறு விடயங்கள் இதனுள் விவாதிக்கப்படுகின்றன. கூடவே உடற்கூறு பற்றியும் தனது உடல்பற்றியும் எதிர்ப் பாலினர் பற்றியும் சமூகச் செயற்பாடு பற்றியும் கற்றுத்தரப்படுகிறது."

உலகில் இன்று எல்லாமே அறிவியல் -கணனிமயமாகிக் கொண்டிருக்கிறது. எவற்றையும் அறிவியல்பூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றலை இன்றைய விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றங்கள் இளந்தலை முறையினருக்கு நல்கிக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கு மிடையில் ஒற்றுமை காணும் முயற்சிகளும்-விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் மனிதநேயத்தையும் இணைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. இன்றைய உலகின் கல்விமுறையிலும் இவை இரண்டுமே வளர்த்தெடுக்கப்படும் போதுதான் மனிதவாழ்க்கை அர்த்தம் நிறைந்ததாகவும் மேம்பாடுடையதாகவும் விளங்க முடியும்.

மாணவர்கள் கல்வியின் மீது மிகுந்த ஆர்வம் கொள்ளும் வகையில் அகத்திலும் புறத்திலும் ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். பெரும்பாலான குடும்பங்களில் அதிகமான மாணவர்கள் தமது நேரத்தின் பெரும்பகுதியைத் தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்ந்திருப்பதிலும் 'கிரிக்கட்' விளையாடுவதிலும் செலவழிக்கின்றமை துரதிஷ்டமே. இன்று அனைத்துலகிலும் கிரிக்கட் மோகமும் தொலைக்காட்சிப் பிரேமையும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

பல ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வரும் கல்வித் திட்டத்திலுள்ள குறைகளைப் போக்கி இருபத்தோராம் நூற்றாண்டுக்கான தேவைகளைப் பெருமளவு நிறைவேற்றும் (என்னும் நம்பிக்கையுடன்) வகையில் கடந்த சில வருடங்களாகப் பேராசிரியர் ஜயதிலக்க அவர்களது தலைமையில் உத்தேசக் கல்வித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றின் பலாபலன்களை எதிர்காலத்தில் அறிந்து கொள்ளலாம்.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா'

*****



உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை

கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை

## நூலகம்

வகுப்பு எண்................ சேர்வு எண்...........

**இந்துக்கல்லூரி - சாவகச்சேரி**

இப்புத்தகம் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப் படவேண்டும்.குறித்த தவணைக்குள் கொடுக்கப்படாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு 1ரூபா குற்றப்பணமாக அறவிடப்படும்.